DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, AMBATTUR
TIRUVALLUR DISTRICT

**STC.No.312/2022**
Deposition of Witness for – Prosecution : PW1
Defence:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செல்வராஜ் | | : |
| த/பெ | : வஜ்ரமுனி | மதம் | : |
| கிராமம் | : அயப்பாக்கம் | தொழில் | : Turner operator |
| வட்டம் | : சென்னை | வயது | : 44/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி – 12.05.2026**
**<u>குறுக்கு விசாரணை</u>: PW1**

1. நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். Turner operator ஆக வேலை பார்த்து வருகிறேன். இவ்வழக்கு எனது அம்மா நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். என் அம்மா இறந்துவிட்டால் நான் சாட்சியளிக்கிறேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் உள்ள அனைத்து விவரமும் படித்து பார்த்து புரிந்த பின்பு தான் கையெழுத்து செய்தேன். என் அம்மாவிற்கும் கொடுக்கல் வாங்கல் இருந்த விவரம் தெரிந்து தான் சாட்சியளிக்க வந்தேன். எம் அம்மா படித்ததில்லை கூலி வேலை பார்த்து வந்தார். எனக்கு அம்மாவிற்கு மாதம் ரூ.15,000/- கூலி வேலையில் வருமானம் வரும். அந்த தொகையை என் அம்மா அவர்கள் செலவிற்கு வைத்து கொள்வார்கள் அவருக்கு தேவையானதை நான் பார்த்து கொள்வேன். எதிரி எவ்வாறு என் அம்மாவிற்கு தெரியும் என்றால் எதிரி உறவினர் ஆவார். எதிரி என்ன வேலை செய்தார் என்ன படித்துள்ளார் என்ற விவரம் அம்மாவுக்கு தெரியுமா என்றால் தெரியாது, எனக்கு தெரியும். எதிரியின் மாத வருமானம் குறித்து என் அம்மாவுக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரிக்கு என் அம்மா ரூ.7,00,000/- கொடுத்தார். மேற்படி தொகை எந்த தேதியில், எங்கு வைத்து யார் முன்னிலையில் எத்தனை தவணையில் கொடுத்தார் என்ற விவரம்

தெரியுமா என்றால் முதல் தவணையாக ரூ.1,00,000/- நவம்பர் மாதம் 2019 ல் ரொக்கமாக, என் பெரியக்கா வீட்டில் வைத்து கொடுத்தார். இரண்டாவது தவணை பிப்ரவரி மாதம் 2021 ல் ரூ.6,00,000/- கொடுத்தார். மாதம் ரூ.15,000/- வட்டி தருவதாக கூறி பணம் வாங்கினார். வழக்கறிஞர் அறிவிப்பு, பிரமாண வாக்குமூலத்தில், வட்டிக்காக பணம் கொடுத்ததாக எங்கும் தெரிவிக்கவில்லை என்றால் அது குறித்து தெரியாது.

2. எதிரிக்கு என் அம்மா பாட்டி முறை ஆவார். என் அம்மா வட்டி தொழில் எதுவும் செய்யவில்லை. என் அம்மா இந்தியன் வங்கி, பாடி கிளையில் ஒரு சேமிப்பு கணக்கு வைத்துள்ளார். என் அம்மா வருமான வரி செலுத்துவாரா என்றால் இல்லை. என் அம்மாவிற்கு ரூ.7,00,000/- எவ்வாறு கிடைத்தது என்றால் 2021 பிப்ரவரி மாதம் என் அம்மா பெயரில் உள்ள சொத்தை விற்பனை செய்து அந்த பணத்துடன் எதிரியின் அம்மா வீட்டிற்கு தான் சென்றுள்ளார் என் அம்மாவிடம் பணம் இருப்பது தெரிந்து அவரை வற்புறுத்தி 4, 5 தினங்களில் எதிரி பணம் வாங்கியுள்ளார். இடம் விற்பனை செய்து பணம் கொடுத்ததற்கு ஆவணம் ஏதேனும் என் அம்மா தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை. இடம் விற்று தான் பணம் கொடுத்த விவரத்தை வழக்கறிஞர் அறிவிப்பு, புகார் மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளாரா என்றால் அது குறித்து தெரியாது. ரூ.20,000/- பணபரிவர்த்தனை வங்கி மூலம் செய்ய வேண்டும் என்ற விவரம் என் அம்மாவிற்கு தெரியுமா என்றால் தெரியாது. சொத்தை விற்ற பணம் ரூ-10,00,000/- ரொக்கமாக தான் என் அம்மாவிற்கு வந்தது வங்கி மூலம் வரவில்லை. வங்கி மூலம் பரிவர்ததனை செய்யாமல் ரொக்கமாக வாங்கியதால் வரி இழப்பு செய்துள்ள விவரம் என் அம்மாவிற்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரிக்கு கடன் கொடுத்ததற்கு ஏதேனும் ஆவணம் என் அம்மா எழுதி வாங்கினாரா என்றால் இல்லை கடன் தரும் பொழுது சோலை மட்டும் தான் வாங்கினார். மொத்தம் 2 காசோலை என் அம்மா வாங்கினார். எதிரியிடம் இருந்து 3 காசோலை வாங்கப்பட்டது என்றும், இன்னும் ஒரு காசோலை என் வசம் தான் உள்ளது என்றால் தெரியாது. எதிரி வாங்கிய கடனை எவ்வளவு தொகை திருப்பி கொடுத்தார் என்றால்

எதுவும் தரவில்லை. எதிரி என் அம்மாவின் வங்கி கணக்கிற்கு ரூ.7,00,000/-த்திற்கு மேல் பணத்தை திருப்பி செலுத்திவிட்டார் என்றும் அவர் தரவேண்டிய பாக்கி எதுவும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு காசோலையில் உள்ள கையெழுத்தும் மற்ற விவரங்கள் வெவ்வேறு மையில் காணப்படுகிறது என்றால் அது குறித்து தெரியாது. இரண்டு காசோலை எந்த தேதியில் வங்கியில் செலுத்தப்பட்டுள்ளது என்றால் 11.08.2022. இரண்டு காசோலையும் எந்த தேதியில் திருப்பப்பட்டது என்றால் தெரியாது.

3. எந்த தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பு தரப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. வழக்கறிஞர் அறிவிப்பு எதிரி பெற்று என் அம்மாவை பார்த்து பேச்சுவார்த்தை நடத்திய விவரம் தெரியுமா என்றால் அவ்வாறு நடக்கவில்லை. எதிரி உறவினர் என்பதால் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை பேச்சுவார்த்தை நடத்திய போது என் அம்மா வழக்கு எதுவும் போடமாட்டேன் என்று கூறியிருந்தார் என்றால் சரியல்ல. கொடுத்த பணத்திற்கு மேலேயே எதிரி அவர் வங்கி கணக்கில் இருந்து என் அம்மா வங்கி கணக்கிற்கு பணம் அனுப்பியுள்ளார் என்றால் சரியல்ல. என் அம்மா இறந்த பின்பு எதிரியிடம் பணம் கேட்டு அணுகினேனா என்றால் இல்லை. என் அம்மா உயிருடன் இருந்த சமயத்தில் எதிரியை அணுகினேனா என்றால் நேரில் சந்திக்கவில்லை, போன் மூலம் தொடர்பு கொண்டேன், லோன் எடுத்து தருவதாக கூறினார். நான் எதிரியை தொடர்பு கொள்ளவில்லை என்றும், அணுகியதாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி முழு தொகையும் செலுத்திய பின்பும் பாதுகாப்பிற்காக கொடுத்த காசோலையை பலமுறை திருப்பி கேட்டபோது தந்துவிடுவதாக கூறி அதிக பணம் பெறவேண்டி மோசடி செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் காசோலையை தவறாக பயன்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு புகார்தாரர் பாட்டி என்பதால் மேல் நடவடிக்கை எதுவும் எதிரி எடுக்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றும் என் அம்மா தாக்கல் செய்த வழக்கிற்காக தெரியாத சங்கதி தெரியும் என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால்

சரியல்ல. எதிரி பணம் தரவேண்டிய எந்த ஒரு கடப்பாடும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

MAHASAKTHI K

Digitally signed by MAHASAKTHI K